கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு பகுதி – I
2004/2005 (மார்ச் - 2006)

# DATS 2102 Dramatic Literature
# DATS 2102 நாடக இலக்கியங்கள்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

<u>முதலாம் பகுதியிலிருந்து <u>எல்லா</u> வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியிலிருந்து <u>இரண்டு</u> வினாக்களுக்கும், மூன்றாம் பகுதியிலிருந்து ஒரு வினாவுக்குமாக எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.</u>

## பகுதி – 1

01. சுருக்கமான விடை தருக.

(i) பழைய கிரேக்க நாடக இலக்கணங்களில் காணப்படும் மூன்று வகையான ஒருமைகள் யாவை?

(ii) சோபோக்கிசின் ஈடிப்பஸ் நாடகத்தில் ஈடிப்பஸ் மன்னன் எவ்வாறு அறிமுகம் செய்யப்படுகின்றான்?

(iii) சோபோக்கிளிசின் ஈடிப்பஸ் நாடகத்தில் வரும் கிறயன் பற்றிச் சுருக்கமாகக் கூறுக.

(iv) சோபோக்கிளிசின் ஈடிப்பஸ் நாடகத்தில் வரும் குழுவினர் நாடகத்தில் வகிக்கும் பங்கு யாது?

(v) சேக்ஸ்பியரின் ஒத்தெல்லோ நாடகத்தில் வரும் முக்கியமான பாத்திரங்கள் எண்மர் பெயர்களையும் அவர்களின் அந்தஸ்துகளையும் தரும்.

(vi) சேக்ஸ்பியரின் ஒதெல்லோ நாடகத்தின் முடிவு எவ்வாறு அமைந்துள்ளது?

(vii) சேக்ஸ்பியரின் ஒதெல்லோ நாடகத்தின் எமிலியாவின் பங்கு யாது?

(viii) அரிஸ்டோட்டிலின் கொள்கைப்படி நாடகத்தின் கட்டமைப்பு எவ்வாறு அமைந்திருக்க வேண்டும்.

(ix) ஹென்றிக் இப்சனின் நாடகத்தில் வரும் பாத்திரங்கள் ஐவர் பெயாரையும் அவர்கள் அந்தஸ்துகளையும் தருக.

(x) நா சுந்தரலிங்கத்தின் அபசுரம் எனும் நாடகத்தில் வரும் பிரச்சனை எனும் குறியீட்டுப் பாத்திரம் அந் நாடகத்தில் வகிக்கும் பங்கு யாது?

## பகுதி – II

02. சோபோக்கிளிசின் ஈடிப்பஸ் மன்னன் நாடகக் கட்டமைப்பைத் தந்து அந்நாடகப் போக்கு எவ்வாறு உச்சத்தை நோக்கிச் செல்கிறது என்பதை விளக்குக.

03. சோபோக்கிளிசின் ஈடிப்பஸ் நாடகத்தில் வரும் ஈடிப்பஸின் அல்லது சேக்ஸ்பியரின் ஒதெல்லோ நாடகத்தில் வரும் இயாகோவின் பாத்திர உருவாக்கத்தினை விளக்குக.

04. நா சுந்தரலிங்கத்தின் அபசுரம் அல்லது இப்சனின் ஒரு பாவையின் வீடு நாடகத்தின் அமைப்பினை விளக்குக.

## பகுதி - III

05. "ஈடிப்பஸ் நாடகமும், ஒதெல்லோ நாடகமும் துன்பியல் நாடகங்களாயினும் துன்பியலை வெளிப்படுத்தும் முறையில் இரண்டிற்கிடையேயும் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன." ஆராய்க.

06. இப்சனின் ஒரு பாவை வீடு நாடகத்தில் நோறாவின் பாத்திரம் உருவாக்கப்பட்டுள்ள விதத்தினை விமர்சனம் செய்க.

***********